செ.வெ.எண்: 715 நாள்: 04.11.2020

**இந்திய அரசு சுற்றுலா அமைச்சம் புதிதாக தொடங்கியுள்ள விரிவான தேசிய ஒருங்கிணைந்த தரவு தளம் மூலம் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வகைப்படுத்தப்பட்ட மற்றும் வகைப்படுத்தப்படாத சுற்றுலா தங்கும் விடுதிகளின் உரிமையாளர்கள் தங்களின் விடுதி விவரங்களை www.nidhi.nic.in. மற்றும் www.saathi.qcin.org ஆகிய வலைதளங்களில் பதிவு செய்ய வெண்டும்.**

**மேலும் "saathi" என்கிற இணையதளத்தில் பதிவு செய்யும் விடுதி உரிமையாளர்களுக்கு சுற்றுலா அமைச்சகம் இந்தி அரச சுய சான்றிதழ் வழங்கவுள்ளது.**

**இந்த நற்சான்று மூலம் தங்களின் வணிகத்தை வெகுவாக உயர்த்திக் கொள்ள முடியும். மேலும், சுற்றுலா அமைச்சகம் இந்திய அரசு வழங்கும் பயிற்சிகளில் தங்களின் விடுதி பணியாளர்களை பங்கு பெறச் செய்து பயன் பெறலாம். அவ்வாறு பதிவேற்றம் செய்யும் விவரங்களை tntotnj@yahoo.in என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பிட கேட்டுக் கொள்ளப்படுகிறது. எனவே, தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள அனைத்து தங்கும் விடுதி உரிமையாளர்கள் தமிழ்நாடு அரசு சுற்றுலா அலுவலகம், காந்திஜி சாலை, ஓட்டல் தமிழ்நாடு வளாகம், ஆற்றுப்பாலம் அருகில், தஞ்சாவூர் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம். தொலைபெசி எண்.04362-230984 தொடர்பு கொள்ளலாம். என** மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.